இந்த பேருந்து நிலையப் பணிகளுக்கான துவக்க விழா, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பொற்கரங்களால், இந்த மாதம் 25ஆம் தேதிக்குள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**“பணிகள் எப்படி நிறைவடையும்? என்ற செய்தியாளர் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில்:”**

ஒரு சிற்பி ஒரு கல்லை கொண்டு செதுக்கத் தொடங்கினால், அந்தச் சிற்பிக்கு உயிரோட்டம் வர என்னென்ன செய்ய வேண்டுமோ, அவை அனைத்தையும் செய்ய வேண்டும். அந்தச் சிற்பத்தின் இறுதி கட்டம் என்பது அதன் கண்களைத் திறப்பதும், நெற்றியில் பொட்டு வைப்பதும் ஆகும். அதுபோல, ஒரு சிறிய பணியையும் விடாமல், அனைத்தையும் கவனமாகச் செய்து வருகிறோம்.

இந்த பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வந்த பிறகு, மக்களின் அடிப்படை தேவைகளில் எதிலும் குறைபாடு இல்லாத வகையில், அது சிறப்பாக இயங்கும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ.வெற்றி அழகன், சி.எம்.டி.ஏ உறுப்பினர் செயலர் / முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), போக்குவரத்து காவல் துணை ஆணையர் (கிழக்கு) திருமதி மெஹலினா ஐடன், மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.பி.ஸ்ரீராமுலு (இராயபுரம்), திருமதி சரிதா மகேஷ் குமார் (திரு.வி.க.நகர்), திரு. கூ. பி. ஜெயின் (அண்ணாநகர்), எம்டிசி பொது மேலாளர் (தொழில்நுட்பம்) திரு.ராஜசேகர், மாமன்ற உறுப்பினர்கள் திரு. எ. நாகராஜன், திருமதி எம். தாவூத் பீ, திருமதி சி. ஸ்ரீதனி, திருமதி பி. அமுதா மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**